**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

மலர்-6 ✧ இதழ்-10 ✧ மே 2024

நிர்வாக ஆசிரியர்


**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# மின்தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாத்து முன்னேறுவோமாக!

**வணக்கம் தோழர்களே!**

இந்திய தேசத்தில் தேர்தல் திருவிழா தொடர்ந்து மூன்று கட்டம் நிறைவுற்ற நிலையில் மீதமுள்ள 4 கட்ட தேர்தல்களும் சுமூகமான நிலையில் ஜனநாயகப்பட்டி வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை நிலவும் என எதிர்நோக்குவோம், இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட தேர்தல் முடிந்த பின்னர் ஜூன் 4ல் தெரிய வேண்டிய முடிவுக்கு அச்சாரமிட்டுவிட்டது போன்று பொதுமக்கள் மத்தியில் பேசப்படுவது பாரதமா இந்தியாவா என விவாதப் பொருளாக்காவிட்டாலும் விவேகத்திற்கும் ஒரு பேச்சாக அமைந்திருக்கிறது. புவியாள்வதற்கு மக்கள் யாரை அனுமதிக்கப் போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

மே 2024 வழக்கம் போலவே கொடியேற்ற, கூட்டம் போட மற்றும் ஊர்வலம் செல்ல அனுமதிப்பார்கள் என எதிர்பார்த்தோம், மாநில தேர்தல் அதிகாரி மாவட்ட தேர்தல் அலுவலர் அனுமதித்தால் நடத்திக் கொள்ளுங்கள் என கைவிரித்த நிலையில் ஆங்காங்கே அனுமதி பெற்றும் பெறாமலும் குறிப்பாக நாம் நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கொடிகளை UTUC பதாகைகளுடன் 50% இடங்களில் கொடியேற்றி உள்ளோம். மீதமுள்ள இடங்களில் அனுமதி மறுக்கப்பட்டது. தொழிலாளர் நாளில் மே தின தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்த கூட விதிவிலக்கு அளிக்கவில்லை என்ற வருத்தம் நிறைந்திருக்கிறது.

முத்தரப்பு ஒப்பந்தத்தின் கையொப்பமிடப்பட்ட நகல் கடைமடைப் பகுதி வரை சென்றிருக்கிறது. பாதிப்பினை உணராத பாமர மக்கள் போன்று தொழிலாளர் வர்க்கமும் திக்கற்று நிற்பதையும் காண முடிகிறது. தொடர்ச்சியாக BP No. 4ல் 66EE மற்றும் 200க்கு மேற்பட்ட உதவி பொறியாளர்களையும், ஒழித்து உத்தரவிட்டது குறித்து பேசுவதற்கு வாரியம் அமைதி காப்பது ஒரு பக்கம், G.O.6 மற்றும், G.O.7 அவசரகதியில் இயற்றிய அரசின் எண்ணற்ற நிறைவேறும் வகையில் G.O.32 ஆகியவற்றின்படி Green Energy Corporation, Power Generation Corporation

அமைவதற்குண்டான பணிகளுக்குண்டான உத்தரவும் வரலாற்று சிறப்பு மிக்க மே மாதம் 3ம் தேதி வெளியாகியுள்ளது.

ஓய்வு பெற்றவர்களுக்கான அகவிலைப்படி உயர்வு 4% அரசாங்கத்தின் உத்தரவுக்காக சென்றது எப்போது திரும்பும் என்பதும் BP No. 2ம் அதன் தொடர்ச்சியான எரிசக்தி துறை உத்தரவும் அகவிலைப்படி விவகாரத்தில் தலைதூக்குமா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

1.12.2019க்கும், 10.05.2023க்கும் இடைப்பட்ட காலத்தில் பணியேற்றவர்களுக்கு மறுக்கப்பட்ட 6% ஊதிய உயர்வை தொடர்ந்து நமது போராட்டமும் வலியுறுத்தலும் முடிவை நோக்கி செல்ல உள்ளது. விரைவில் கேங்மேன் மற்றும் வாரிசு பணியாளர் 6% ஊதிய உயர்வு சுமார் 10000க்கு மேற்பட்டோர் கிடைக்க உள்ளது என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

கள உதவியாளர்களாக (Field Assistant) - கேங்மேன் பணியாளர்களை மாற்றுவதற்காக வழிமுறையும் வாரியத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பது நம்பிக்கை மிகுந்த செய்தியாகவும் இருக்கிறது.

விபத்தற்ற மின்சார வாரியமாக மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தொடர் விபத்துகளையும், உயிரிழப்புகளையும் மின்வாரியம் சந்தித்து வருவது கவலை அளிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக 08.05.2024ல் கிருஷ்ணகிரி மின்வட்டம் ஓசூர் கோட்டத்தில் திரு. E. கோவிந்தராஜ், கேங்மேன் பணியாளர் விபத்தில் பலியாகியிருப்பது உரிய மேற்பார்வைக்கும், பணிகளை செய்வதற்கும் ஆள் பற்றாக்குறையே காரணமாக அமைந்துள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. களப்பணியில் தேவையான அளவுக்கு களஉதவியாளர், கம்பியாளர் பதவிகளை நிரப்பாமல் களப்பணியை விபத்தின்றி செய்திடுவது என்பது கானல்நீர்தான்.

ஊதிய உயர்வு இரண்டாவது தவணை எப்போது கிடைக்கும் என்ற ஆவலை தணிக்க டிசம்பர் வரை காத்திருக்க வேண்டுமா அல்லது இடைப்பட்ட காலத்திலே கைநிறைய செய்வார்களா என பார்ப்போம்.

அலவன்ஸ்களுக்காக அமைக்கப்பட்ட கமிட்டியும் தொடர்ந்து காலம் தாழ்த்துவதற்கான காரணமும் புரியவில்லை, வேலைப்பளு மூன்று மாதத்திற்குள் பேசி முடிக்கப்படும் என்ற உத்தரவாதம் 12 மாதமாகியும் நிசப்தமாக உள்ளது என்ன காரணமோ!?இப்படியானால் 1.12.2023க்கான ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தை கமிட்டி அமைத்தல் எப்போது.....?

திருவண்ணாமலையில் 31.03.2024ல் நடைபெற்ற செயற்குழு தீர்மானங்களின்மீது வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து கோரிக்கையும் நிறைவேற்றித் தருவார்கள் என நம்புவோம்.

தொழிலையும் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் பணிகளில் என்றும் முழுவீச்சாய் முன்னணியில் நிற்போம் என்பதை உறுதிபடுத்தும் வகையில் 2024 அக்டோபர் மாதத்திற்குள் அனைத்து கிளைகளிலும் பொதுக்குழு நடைபெற்று நிறைவு பெறட்டும், 2024 டிசம்பர் பொதுக்குழு கூட்டத்திற்கு இப்போதிருந்தே ஆயத்தமாவோம்.

தொழிலாளர்களின் நலனில் அக்கறைக் கொண்ட நமக்கு தொழிலாளர்களின் அங்கீகாரம் என்றும் நமக்கானது என்பதை களப்பணியில் நிரூபிப்போம்.

***- ஆசிரியர்***

## சேலம் வட்டக் கிளை

சேலம் வட்டக் கிளை சார்பாக 01.05.2024 காலை சேலம் உடையாப்பட்டி மேற்பார்வை பொறியாளர் வாயிலில் காலை சரியாக 9.15 மணிக்கு எம்ப்ளாயீஸ் பெடரேசனுடைய இரட்டை கோபுரம் தாங்கிய செங்கொடி மாநில செயல்தலைவர் / திட்டத் தலைவர் தோழர் R. ஜெயராமன் அவர்கள் தலைமையில் சிறப்பாக கொடி ஏற்றப்பட்டது.

தலைவர் அவர்கள் தனது உரையில் உழைப்பாளர் தினம் உருவான விவரம் மற்றும் மே 1 விடுமுறை வழங்கப்பட்ட விவரம் ஆகியவற்றை விவரமாக எடுத்துரைத்தார்.

தோழர் மாநில இணைச் செயலாளர் S. புகழேந்தி அவர்கள் உழைப்பாளர் தினத்தில் ஒன்று கூடி பெற்ற உரிமைகளை பேணி காத்திட வேண்டுமென தெரிவித்தார்.

திட்ட செயலாளர் தோழர் R. சேகர் மே தின சிறப்புரையாற்றியதுடன் நாம் அனைத்து தொழிலாளர்களையும் ஒன்றிணைத்து ஓரணியில் திரண்டு நமது உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமென தெரிவித்தார்.

திட்ட பொருளாளர் திரு. R. கோவிந்தராஜ் அவர்கள் நன்றியுரை தெரிவித்து மே தின கோஷங்கள் எழுப்பப்பட்டது. விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் சேலம் வட்டக் கிளையின் செயல் தலைவர் தோழர் P. கஜேந்திரன், ராஜேந்திரன் உபதலைவர், இணைச்செயலாளர்கள் V. பாரதி, A. பெரியசாமி, மேற்கு கோட்ட தலைவர் சீனிவாசன் கிழக்கு கோட்டத் தலைவர் தோழர் உமாபதி மேற்கு கோட்ட உதவி செயலாளர் V. செந்தில்குமார் மற்றும் பிரிவு பிரதிநிதி தோழர்கள், கணேசன், முருகேஷ்குமார், ரமேஷ், சிவசங்கர் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மகளிர் அணி செயலாளர் திருமதி. V. சிவராணி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## மேட்டூர் வட்டக் கிளை

**TNEB** எம்ப்ளாயீஸ் பெடரேசன் மேட்டூர் மின்பகிர்மான வட்டக்கிளை 01.05.2024 அன்று சங்ககிரி கோட்டம் மகுடஞ்சாவடி பிரிவு அலுவலகம் முன்பு மே தின கொடியேற்று விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி திட்ட ஆலோசகர் திரு. M. வெங்கடாஜலம் அவர்கள் தலைமை தாங்கினார். சங்ககிரி கோட்ட செயலாளர் திரு. சக்திவேல், எடப்பாடி கோட்டச் செயலாளர் திரு. G. பெரமன், எடப்பாடி கோட்ட இணை செயலாளர் திரு. A. பழனிசாமி மற்றும் சங்ககிரி கோட்டத்தில் உள்ள நம் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். திரு. R. வெங்கடாஜலம் திட்ட ஆலோசகர் இரட்டை கோபுரம் தாங்கிய செங்கொடியினை ஏற்றி, அனைவரும் கோசம் முழங்கினார்கள். இதில் TNEBEF, UTUC, காகித கொடி தோரணங்கள் கட்டப்பட்டு UTUC மற்றும் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேசன் பொதுச்செயலாளர் கரங்களை வலுபடுத்துவோம் என்ற சூளுரையும் ஏற்றார்கள்.

## இராமநாதபுரம் மின்திட்டக் கிளை

இராமநாதபுரம் மின்திட்ட கிளையின் TNEBEF சார்பாக இராமநாதபுரம் மேற்பார்வை பொறியாளர் அலுவலக நுழைவு வாயிலில் மே தின கொடியேற்று விழாவில் கொடியேற்றி தலைமையேற்ற திட்டத் தலைவர் V. காதர்பாட்சா சிறப்புரையாற்றிய திட்ட செயலாளர் R. வீரசேகர் ஏற்புரையாற்றிய திட்ட பொருளாளர் திரு. S. பால்ராசு நன்றியுரையாற்றிய திட்ட

அமைப்பு செயலாளர் P. முத்துராமலிங்கம் மேலும் திரளாக கலந்து கொண்ட திட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி. M. காயத்ரி இராமநாதபுரம் கோட்ட செயலாளர் S. கௌவுதம் மற்றும் V. ஜான்பீட்டர் பரமக்குடி கோட்ட பொறுப்பாளர்கள் திரு. K. மனோகரன், திரு. S. இராஜேந்திரன், S. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## கோவை வட்டக் கிளை

**கோ**வையில் கொடி ஏற்ற காவல் துறை அனுமதி வழங்க மறுக்கப்பட்ட நிலையில் கடுமையான போராட்டத்திற்கு பின் கோவை தலைமை பொறியாளர் அலுவலக நுழைவாயிலில் மாநில பொருளாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் மற்றும் கோவை மண்டல செயலாளர் திரு. K.P. ஸ்ரீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கொடியை மாநில உப தலைவரும், ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்க கோவை கிளையின் செயலாளர் திரு. B. வீரமணி அவர்கள் ஏற்றி சிறப்பித்தார்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. அதன் பின் கோவை மாநகர் வட்டத்தில் உள்ள R.S.புரம் துணை மின் நிலையம், சாய்பாபா காலணி, இடையர் பாளையம், கவுண்டம் பாளையம், கவுண்டம் பாளையம் துணை மின் நிலையம், சங்கனூர், கணேஷ் நகர், தண்ணீர் பந்தல், நகரம் பீளமேடு, செயற்பொறியாளர் அலுவலகம் ஒண்டிப்புதூர், சின்னியம் பாளையம் கிழக்கு, சின்னியம் பாளையம் வடக்கு, சின்னியம் பாளையம் மேற்கு, காளப்பட்டி துணை மின் நிலையம் ஆகிய இடங்களில் மொத்தம் 14 இடங்களில் மாநில, மண்டல, வட்ட, கோட்ட, மகளிர் அணியினர் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு கொடி ஏற்றும் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி முடித்தனர்.

## சென்னை தெற்கு கிளை - I

**1.05.2024** அன்று சென்னை தெற்கு I கிளையில் 4 இடங்களில் மே தின கொடியேற்று விழா கிளைத்தலைவர் திரு. K. சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் காலை 10.00 மணியளவில் கோடம்பாக்கம் துணை மின்நிலையம் வளாகம் முன்பு கிளை இணைச் செயலாளர் திரு. R. ரகோத்தமன் அவர்கள் கொடியேற்றி வைத்தார். இரண்டாவதாக 10.45 மணியளவில் க.க.நகர் தெற்கு பிரிவில் க.க.நகர் கோட்டச் செயலாளர் திரு. K. ரஞ்ஜித்குமார் அவர்கள் கொடியேற்றி வைத்தார். அதன் பின்பு 12.00 மணியளவில் போரூர் கோட்ட அலுவலகம் முன்பு திரு. K. அன்புசரவணன், கோட்டத் தலைவர் அவர்கள் முன்னிலையில் திரு. J. கோபி கிளை அமைப்புச் செயலாளர் அவர்கள் கொடியேற்றி வைத்தார். அதற்கு பிறகு 12.45 மணியளவில் பூந்தமல்லி உபகோட்டம் அலுவலகம் முன்பும் போரூர் கோட்ட தலைவர் திரு. E. அன்பு சரவணன் முன்னிலையில் சென்னை தெற்கு கிளை பொருளாளரும், போரூர் கோட்டச் செயலாளருமான திரு. M. முருகேசன் அவர்கள் கொடியேற்றி வைத்தார். இந்த விழாவில் கிளை பொறுப்பாளர்களும், கோட்ட பொறுப்பாளர்களும், தொழிலாளர் தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## விருதுநகர் வட்டக் கிளை

**த**மிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் விருதுநகர் மின்பகிர்மான வட்டக் கிளை 01.05.2024 அன்று மே தின கொடி ஏற்று விழா சிவகாசி கோட்ட அலுவலகம் முன்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிவகாசி கோட்டச் செயலாளரும் வட்ட இணைச் செயலாளருமான தோழர் G. மாரியப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் தோழர் S.

மணிகண்டன் அவர்கள் மே தின கொடியேற்றி மே தின உரை நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சியில் வட்ட செயலாளர் தோழர் K. ஞானகுரு வட்ட அமைப்புச் செயலாளர் தோழர் R. ராதாகிருஷ்ணன் வட்ட பொருளாளர் தோழர் G. பாலசுப்பிரமணியன், வட்ட இணைச் செயலாளர்கள் ஐயப்பன், சந்திரன், முனியாண்டி, கோட்ட பொருப்பாளர்கள் சங்கரேஸ்வரன், லட்சுமணன், சங்கிலியாண்டி உள்ளிட்ட 30 தோழர்கள் கலந்து கொண்டனர். அன்றைய் தேதியில் விருதுநகர் மத்திய அலுவலகம், செங்கமல நாச்சியார்புரம், சாட்சியாபுரம் போன்ற அலுவலகங்களில் மே தின கொடி ஏற்றப்பட்டது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## திருவாரூர் வட்டக் கிளை

திருவாரூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில் உள்ள நமது சங்க கொடியினை திட்ட உபதலைவர் திரு. P. அண்ணாதுரை அவர்கள் ஏற்றி வைத்தார். திட்ட செயலாளர் S. முருக அருள் முன்னிலை வகித்து மே தின உரையாற்றினார். இந்நிகழ்வில், திட்ட இணை செயலாளர் P. குமரசாமி, மாநில குழு உறுப்பினர் M. கலியமூர்த்தி, கோட்ட செயலாளர் R. ராஜாராமன் மற்றும் சங்க உறுப்பினர்கள், திருவாரூர் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பின் தோழர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர். அன்றைய தினம் திருவாரூர் நகர் வீதிகளில் மே தினம் பெருந்திரள் ஊர்வலம் நடைபெற்றது. மன்னார்குடி கோட்டத்தில் திட்ட செயல் தலைவர் P. ராஜகோபால் அவர்கள் தலைமையில், திட்ட பொருளாளர் K. வெங்கடேசன், கோட்ட தலைவர் K. ராஜேந்திரன், கோட்ட செயலாளர் S. ஜெயபால், திட்ட உபதலைவர் T. அம்பிகாபதி ஆகியோர் மன்னார்குடி நகர் மற்நறும் புறநகர் பகுதிகளில் மே தின கொடி ஏற்றினார். திருத்துறைப்பூண்டி பகுதியில் அமைப்பு செயலாளர் S. தம்புசாமி தலைமையில் பிரிவு அலுவலகங்களில் கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட்டன.

## உடுமலை வட்டக் கிளை

உடுமலை மின் பகிர்மான வட்டத்தில் கடந்த 1.5.2024 அன்று உடுமலை மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக மின் பகிர்மான வட்டக்கிளையும், மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் வட்ட கிளையும் இணைந்து திட்ட தலைவர் ஆறுச்சாமி। அவர்கள் தலைமையில் திரு. மோகன் திட்ட செயலாளர் மற்றும் மாநில உப தலைவர் சக்திவேல் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் வட்டக் கிளையுயைட தலைவர் மகுடேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் உடுமலை வட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி. சசிகலா அவர்கள் கொடியேற்றி சிறப்பித்தார்கள். திரு. மோகன் அவர்கள் பொருளாளர் சதாசிவம் மத்திய அலுவலக மகளிர் அணி செயலாளர் திருமதி. வள்ளிநாயகம் மற்றும் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் வட்டத்தினுடைய பொறுப்பாளர் சக்திவேல் ஆகியோர் மே தினம் பற்றி உரையாற்றினார்கள். தொடர்ந்து உடுமலை சங்கமலையில் வட்ட செயற்குழு நடைபெற்றது.

## சென்னை வடக்கு மின் திட்டக் கிளை

சென்னை வடக்கு திட்ட கிளையின் சார்பாக 01.05.2024 அன்று மே தின கொடியேற்று நிகழ்ச்சி TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மற்றும் UTUC தோரணக் கொடிகளைக் கட்டி சிறப்பாக நடைபெற்றது.

### பொன்னேரி கோட்டம்

**கு**ம்மிடிப்பூண்டி துணை மின்நிலைய வளாகத்தில் திட்டத்தினுடைய இணை செயலாளர் திரு. முருகேசன் அவர்கள் சங்க கொடிதனை ஏற்றினார்கள்.

பொன்னேரி கோட்ட துணை மின்நிலைய வளாக வாயிலில் சங்க கொடிதனை செயற்குழு உறுப்பினர் திரு. டில்லிபாபு அவர்கள் ஏற்றினார்கள்.

### பெரம்பூர் கோட்டம்

**கொ**ளத்தூர் பிரிவு அலுவலகத்தில் திட்டத்தினுடைய தலைவர் திரு. குமார் அவர்கள் சங்க கொடியினை ஏற்றினார்கள்.

### வியாசர்பாடி கோட்டம்

**ஸ்**டான்லி துணை நிலைய வளாக வாயிலில் சங்க கொடிதனை திட்ட இணைச் செயலாளர் திரு. ராஜேந்திரன் அவர்கள் ஏற்றினார்கள்.

### தண்டையார்பேட்டை கோட்டம்

**ம**ணலி புதுநகர் பிரிவு அலுவலக வாயிலில் சங்க கொடிதனை செயற்குழு உறுப்பினர் திரு. கண்ணன் அவர்கள் ஏற்றினார்கள். மேற்கண்ட கொடியேற்று நிகழ்ச்சியில் அந்தந்த கோட்டத்தினுடைய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கோபி கிளை

**கோ**பி மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு 01.05.2024 காலை 09.00 மணியளவில் மே தின கொடியேற்று விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திட்ட தலைவர் ஆர். கிருஷ்ண மோகன்ராஜ் அவர்கள் தலைமையில் மாநில உப தலைவர் மற்றும் திட்ட செயலாளர் அ.மு. மணி கொடி ஏற்றி சிறப்புரை ஆற்றினார். மே தின விழா கொடியேற்றத்தில் திட்ட நிர்வாகிகள் கே. எழில்வேலன் திட்ட துணைச் செயலாளர் திட்ட மகளிர் அணி செயலாளர் த. நித்யா, திட்ட கூடுதல் செயலள், வி.ஆர். செந்தில்குமார், திட்ட அமைப்பு செயலாளர் எஸ். செந்தில்குமார், மத்திய அலுவலக செயலாளர் பி. பிரபாகரன், பவானி கோட்ட தலைவர் ஜி. சண்முகம், பவானி கோட்ட துணை செயலாளர் எஸ். சரவணன், கோபி கோட்ட தலைவர் கு. பிரகாஷ் மற்றும் கோபி கிளையில் உள்ள நமது சங்க பொருப்பாளர்களும், உறுப்பினர்களும் தொழிலாளர் தின கொடியேற்று விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஐடிசி செயற்பொறியாளர் அலுவலக வாயிலில் நமது சங்க கொடியினை திட்ட தலைவர் P. டென்னிஸ் அவர்கள் தலைமையில் திட்ட அமைப்பு செயலாளர் A. செந்தில்குமார், திட்ட செயலாளர் R. ராஜேஷ் பாபு ஆகியோர் முன்னிலையில் திட்ட இணை செயலாளர் திரு. ராஜா அவர்கள் சங்க கொடியினை ஏற்றி சிறப்பித்தார் இதில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டுள்ளனர்.

## நாமக்கல் கிளை

**நா**மக்கல் திட்டத்தில் மே-1 தொழிலாளர் தினத்தை திட்டமிட்டபடி ப. வேலூர் கோட்ட அலுவலக வாயிலில் காலை 9.15 மணியளவில் திட்ட செயல் தலைவரும் கரூர் மண்டல செயலாளருமான திரு. தண்டபாணி அவர்கள் தலைமையில் உதவி பொறியாளர் நகர் ப. வேலூர் திரு. வினோத் அவர்கள் நமது இரட்டை கோபுரம் தாங்கிய செங்கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து தொழிற்சங்க நிர்வாகிகள் சிறப்புரையாற்றிட கலந்து கொண்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது நிகழ்வில் திட்ட செயலாளர் திரு. ப. சசிகுமார், திட்ட துணை தலைவர் திரு. ராமன், திட்ட அமைப்பு செயலாளர் திரு. சுப்ரமணியன் ப. வேலூர் கோட்ட தலைவர் திரு. சரவணன், ப. வேலூர் இணை செயலாளர் திரு. கந்தசாமி, நாமக்கல் கோட்ட செயலாளர் திரு. ம. துரைசாமி உட்பட 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

திருச்செங்கோடு கோட்டம் எலச்சிப்பாளையம் உபகோட்ட அலுவலக வாயிலில் காலை 9.30 மணியளவில் நடைபெற்ற மே-1 கொடியேற்ற நிகழ்ச்சியினை திருச்செங்கோடு கோட்ட தலைவர் திரு. முருகேசன் அவர்கள் தலைமையில் திட்ட தலைவரும் மாநில துணைத் தலைவருமான திரு. வெ. பழனிசாமி நமது தொழிற்சங்க செங்கொடியினை ஏற்றி வைத்து பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் மற்றும் எழுது பொருட்கள் வழங்கப்பட்டு தொழிலாளர்கள் மற்றும் கலந்து கொண்ட பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திட்ட பொருளாளர் திரு. P. சக்திவேல், திருச்செங்கோடு கோட்ட செயலாளர் திரு. பழனியப்பன் உட்பட தொழிலாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நாமக்கல் கோட்டம் நாமக்கல் 110/22 கி.வோ துணை மின்நிலைய வளாகத்தில் காலை 10.15 மணியளவில் நடைபெற்ற மே-1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கொடி ஏற்ற நிகழ்ச்சியில் திட்ட தலைவர் திரு. வெ. பழனிசாமி அவர்கள் தலைமை தாங்கிட திட்ட துணைத் தலைவர் திரு. ராமன் அவர்கள் நமது செங்கொடியை ஏற்றி தொழிலாளர் தினத்தை குறித்து சிறப்புரையாற்றிட தொடர்ந்து திட்ட தலைவர் திரு. வெ. பழனிசாமி, திட்ட செயலாளர் திரு. ப. சசிகுமார், திட்ட செயல் தலைவர் திரு. வெ. பழனிசாமி, திட்ட செயலாளர் திரு. ப. சசிகுமார், திட்ட செயல் தலைவர் திரு. தண்டபாணி ஆகியோர் மே-1 தினம் குறித்து உரையாற்றிட கலந்து கொண்ட தொழிலாளர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டு திட்ட பொருளாளர் திரு. சக்திவேல் அவர்கள் நன்றி தெரிவித்தார் மேற்கண்ட நிகழ்வில் திட்ட அமைப்பு செயலாளர் திரு. சுப்ரமணியன் உட்பட திட்ட மற்றும் கோட்ட நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டார்கள். தொடர்ந்து நடைபெற்ற திட்ட செயற்குழுவில் விரிவடைந்த செயற்குழு நடத்திட நிர்வாகிகள் கருத்து கேட்கப்பட்டு விரிவடைந்த செயற்குழுவினை ஜூலை மாதம் நடத்திடுவது என முடிவு செய்யப்பட்டு பல்வேறு தீர்மானங்கள் இயற்றப்பட்டது. திட்ட பொருளாளர் திரு. P. சக்திவேல் அவர்கள் நன்றி தெரிவித்திட செயற்குழு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## தேனி கிளை

**மே**ற்பார்வை பொறியாளர் தேனி அலுவலக முன்பாக TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மற்றும் UTUC ஆகிய தோரணங்களை கட்டியும் கொடி கம்பம் வர்ணம் பூசப்பட்டு தொழிலாளர் தினமான மே 1 அன்று இரட்டை கோபுர செங்கொடியினை தேனி திட்ட தலைவர் திரு. M. மகாலிங்கம் அவர்களால் ஏற்றப்பட்டது. அதில் திட்ட செயலாளர் ரா. மூக்கையா அவர்கள்

முன்னிலை வகித்தார். மேலும் திட்ட உபதலைவர் M. பழனிவேல் இணைச்செயலாளர் U. மைதீன்பாட்ஷா தேனி கோட்ட இணைச்செயலாளர் C. ராமர், P. சின்னச்சாமி காளணன் AITUC முன்னாள் பொறுப்பாளர்கள் பெத்தாச்சி ஆசாத் முல்லை முருகன் UTUC மாநில செயற்குழு உறுப்பினர் திரு. ராஜதுரை ஆகியோர்களின் முன்னிலையில் செங்கொடி ஏற்றப்பட்டு அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. பெரியகுளம் கோட்டம் கீழவடகரை பிரிவில் மே தினத்தை மிகவும் விமர்ச்சிகாக தோரணங்கள் ஒலிபெருக்கி மூலம் கொண்டாடப்பட்டது. மேலும் கடமலைகுண்டு பிரிவில் செங்கொடியை வெற்றிவேல் ஏற்றினார். திட்ட செயலாளர் ஆர். மூக்கையா உபதலைவர் P. இருளப்பன் முன்னாள் பொருளாளர் முத்துமாயன் கோட்ட தலைவர் K. சுப்புராம் திரு. சின்னச்சாமி ஒப்பந்த தொழிலாளர் N. சாமிநாதன் மற்றும் திட்ட உபதலைவர் பீர் முகமது ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சின்னமனூர் கோட்டம் மே தினத்தில் திட்ட பொருளாளர் ரா. காமராஜன் கோட்ட தலைவர் R. கண்ணன் முன்னாள் கோட்ட செயலாளர் முத்துமுருகன் மற்றும் ராமசாமி கிருஷ்ணன் மொட்டையாண்டி முத்துகிருஷ்ணன் அழகுராஜா ஜெயமணி சின்னமனூர் கோட்ட செயலாளர் முருகேசன், பிரியங்கா தேவி, ரவீந்திரன், ரமேஷ், மணிகண்டன், முத்துக்குமார் ஆகியோர்கள் கீழ்காணும் பிரிவுகளில் இரட்டை கோபுரம் செங்கொடி ஏற்றப்பட்டது. நகர் சின்னமனூர் மார்க்கையன்கோட்டை எரசை உத்தமபாளையம் கோம்பை காமயகவுண்டன்பட்டி புதுப்பட்டி கம்பம் கூடலூர் ஓடைப்பட்டி காமாட்சிபுரம் சுருளிப்பட்டி ஆகிய பிரிவுகளில் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மற்றும் UTUC செங்கொடியை ஏற்றி மே தின தொழிலாளர்களின் தினத்தை கொண்டாடி மகிழ்ந்தோம்.

## கோவை தெற்கு வட்டக் கிளை

**கோ**வை தெற்கு வட்டக் கிளையில் ‘மே’ தின விழா 1.5.2024 காலை பத்து இடங்களில் கொண்டாடப்பட்டது. எம்ப்ளாயீஸ் பெடரேசன் மற்றும் UTUC தோரணம் கட்டப்பட்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் இரட்டைக் கோபுரக் கொடி ஏற்றப்பட்டது. இனிப்புகள் வழங்கப்பட்டது. சோமனூர் கோட்டத்தில் மாநில துணைத் தலைவர் ஆ. கண்ணாதுரை மற்றும் குனியமுத்தூர் கோட்டத்தில் கிளை பொருளாளர் I. லியோபால் முன்னிலை வகித்தனர்.

| | இடம் | | கொடியேற்றியவர் |
|---|---|---|---|
| **சோமனூர் கோட்டம்** | | | |
| 1. | கோட்ட அலுவலகம் | - | **R. மகேஷ்குமார்,** கோட்ட செயலாளர் |
| 2. | அரசூர் 230 KV.SS | - | **S. உதயகுமார்,** வட்ட இணை செயலாளர் |
| 3. | அரசூர் / நீலாம்பூர் பிரிவு அலுவலகங்கள் | - | **C. பாஸ்கரன்,** கோட்ட உதவி செயலாளர் |
| 4. | பூமலூர் SS | - | **A. கோபாலகிருஷ்ணன்,** பிரிவு பிரதிநிதி |
| **குனியமுத்தூர் கோட்டம்** | | | |
| 5. | கோட்ட அலுவலகம் | - | **R. மணிகண்டதாஸ்,** கோட்ட செயலாளர் |
| 6. | குறிச்சி SS | - | **K.S. ரவிகுமார்,** கோட்ட தலைவர் |
| 7. | ஒத்தக்கால் மண்டபம் SS | - | **V. பால்ராஜ்,** AE பிரிவு பிரதிநிதி |
| 8 | மதுக்கரை SS | - | **V. சண்முகம்,** (ஓய்வு) முன்னாள் கோட்டத் தலைவர் |

**நெகமம் கோட்டம்**

| | | |
|---|---|---|
| 9. கோட்ட அலுவலகம் | - | **A. செந்தில்குமார்,** கோட்ட செயலாளர் |
| 10. கிணத்துகடவு SS | - | **A. ஜாகீர்உசேன்,** கோட்டத் தலைவர் |

## கோவை வடக்கு வட்டக் கிளை

**கோ**வை வடக்கு வட்டக் கிளையின் 'மே' தின விழா பத்து இடங்களில் கொண்டாடப்பட்டது. எம்ப்ளாயீஸ் பெடரேசன் மற்றும் UTUC தோரணம் கட்டப்பட்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் இரட்டை கோபுரக் கொடி ஏற்றப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டது.

மாநில பொருளாளர் J.L. பாஸ்டின்ராஜ், கிளை செயலாளர் A. முருகவேல், கிளை பொருளாளர் R. சிவபிரகாஷ், GCC செயலாளர் M. ராஜேந்திரன், B. வீரமணி செயலாளர் REOS மகளிரணி செயலாளர் R. யோகசித்ரட கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

| **இடம்** | | **கொடியேற்றியவர்** |
|---|---|---|
| **மேட்டுப்பாளையம் கோட்டம்** | | |
| 1. கோட்ட அலுவலகம் | - | **S. புவனேஸ்வரன்,** கோட்டத் தலைவர் |
| 2. AEE/நகரம்/தெற்கு அலுவலகம் | - | **K. மகேஸ்வரன்,** கோட்ட செயலாளர் |
| 3. கரியாம்பாளையம் | - | **சிவஇளங்கோ,** உதவி செயலாளர் |
| **சீரநாயக்கன்பாளையம் கோட்டம்** | | |
| 4. கோட்ட அலுவலகம் | - | **N. கனகராஜ்,** வட்ட செயல் தலைவர் |
| 5. தொண்டாமுத்தூர் | - | **M. கருப்புசாமி,** வட்ட அமைப்பு செயலாளர் |
| 6. மாதம்பட்டி | - | **A. கணேசன்,** கோட்ட செயலாளர் |
| 7. ஆலாந்துரை | - | **S. ராஜீவ்,** கோட்ட செயலாளர் |
| **கு.வடமதுரை கோட்டம்** | | |
| 8. M.G.C. பாளையம் SS | - | **A. ராஜேந்திரன்,** வட்ட கிளைத் தலைவர் |
| 9. சரவணம்பட்டி SS | - | **M. காமாட்சிமுருகன்,** கோட்ட செயலாளர் |
| 10. கோட்ட அலுவலகம் | - | **P. பிரகாஷ்,** மாநில இணை செயலாளர் |

## மேட்டூர் வட்டக் கிளை

**த**மிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மேட்டூர் அனல் மின் நிலையம் முன்பு 01.05.2024 இன்று காலை 09-00 மணியளவில் மே தின கொடியேற்று விழா சிறப்பாக நடைபெற்றது.

மேட்டூர் அனல் மின் நிலைய மேதின கொடியேற்று விழா கிளை செயலாளர் _. தெய்வன் தலைமையில் நடைபெற்றது.

கோவை P&C திட்ட செயலாளர் தோழர் அப்புசாமி அவர்கள் கொடியேற்றி வைத்தார்.

தோழர் R. பிரகாசம் மாநில இணைச்செயலாளர் அவர்கள் விளக்கவுரையாற்றினார்.

தோழர் G. அண்ணாமலை கிளை பொருளாளர் அவர்கள் இனிப்பு வழங்கினார் மற்றும் தோழர்கள் உத்திராசு MEDC அப்பர்சாமி MEDC சேகர் உள்ளிட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

உழைக்கும் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளை பாதுகாப்போம் மற்றும் உரிமைகள் பறிபோவதை தடுப்போம் என மேதின உறுதிமொழி ஏற்கப்பட்டது.

உரிமைகளை போராடி பெற்றுத் தந்த தியாகிகளை நினைவுகூர்ந்து, வீரவணக்கம் செலுத்துப்பட்டது.

## ''சிகாகோ பேரெழுச்சி''



**''மே தின வரலாறு''**

அமெரிக்காவின் முதலாளிகள் தொழிலாளி வர்க்கத்தை சுரண்டி வந்தனர், அவர்கள் நாட்டு தொழிலாளர் களுக்கு வழங்கபட்ட கூலியைவிட மிக குறைவாக புலம் பெயர்ந்த தொழிலாளர் களுக்கு வழங்கினர், மொத்தத்தில் நாடுமுழுவதும், வேலையின்மையும், பசியும், பட்டினியுமாக இருந்தனர்.

இயந்திரத்தனமான வாழ்க்கையில் சுழன்று கொண்டிருந்த தொழிலாளர்கள் வாழ்வில், மறு மலர்ச்சி காண, ஓய்வும் உறக்கமும் அத்தியாவசியமானது. எனவே 8 மணி நேர வேலை, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உறக்கம் ஆகியவற்றை நெறிபடுத்தி, தொழிலாளர்களை ஒருங்கிணைத்தது அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு.

மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற மே 1,1886ல் வேலை நிறுத்தங்கள் முக்கிய தொழில் நகரங்களில் 3,50,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்று போராடினர், தொழிலாளர்களின் போராட்டத்தில் பிரச்சனைகளை அவர்களே ஏற்படுத்துவார்கள், உள்ளே புகுந்து போராட்டத்தை கலைத்துவிடலாம் என போலிஸ் காத்திருந்தது. ஆனால், ஒரு சிறிய பிரச்சனையும் தொழிலாளர்களால் ஏற்படாத நிலையில், வழக்கம் போல் போலீஸ் தன்னுடைய கலகத்திட்டத்தை ஏற்படுத்தி துப்பாக்கி சூடு நடத்தி அதில் 4 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர், இச்செய்தி பரவி சிகாகோ நகர மக்கள் அனைவரும் கொந்தளித்து, ஹேமார்கெட் சதுக்கத்தில் கண்டனகூட்டம் நடந்துகொண்டிருந்தபோது ''போன்பீல்ட்'' என்ற போலீஸ் அதிகாரியின் உத்தரவின் பேரில் கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தபட்டு தொழிலாளர்களின் இரத்தத்தால் ஹேமார்கெட் சதுக்கம் சிவந்து போய் செந்நிறமாகியது.

போராட்டக்காரர்களை கைது செய்தும், தொழிற்சங்கதலைவர்களின் மீது பொய் வழக்குகளை போட்டும், சிறையிலடைத்து, விசாரணை என்ற பெயரில் விசாரித்து தூக்கு தண்டனை, மற்றும் ஆயுட்கால சிறைவாசம் ஆகிய தண்டனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

நவம்பர் 11,1887 தொழிலாளர்களின் முக்கிய தலைவர்கள் 4 பேர் தூக்கிலிடபட்டனர், இதற்கு முன்பாக 21 வயதான ஒரு தலைவர் டைனமேட் என்ற வெடிப்பொருளை வாயில் கடித்து தற்கொலை செய்து கொண்டார், இந்த நிகழ்ச்சி உலகத்தையே உலுக்கி எடுத்தது,இன்றைக்கும் முதலாளித்துவ உலகத்தை கலங்கடித்து கொண்டிருக்கும் முக்கிய நிகழ்வாக இருந்து கொண்டிருக்கிறது.

சிகாகோ தியாகிகளின் தியாகம் அமெரிக்க தொழிலாளர்களை மீண்டும் எழுச்சியுற செய்து, மீதமுள்ள தொழிற்சங்க தலைவர்களை காப்பாற்றிட சட்ட போராட்டங்கள் செய்து, ஜானல்ட்ஜெல்ட் என்ற கவர்னர் இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பில் இவ்வாறு கூறினார்'' இவ்வழக்கில் முற்றிலுமாக அநீதி இழைக்கப்பட்டுள்ளது, நான் என் மனசாட்சியின் படி செயல் படுகிறேன்'' என கூறி மீதமிருந்த தொழிற்சங்க தலைவர்களை விடுதலை செய்தார் என்பது வரலாறு.

அமெரிக்க தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டமும், சிகாகோ தியாகிகளின் தியாகமும் தான், இன்றைக்கு ''மே தினமாக-உழைப்பவர் தினமாக நம்முன் நிற்கிறது என்பதுதான் அடிப்படைகாரணம்.

1889 ஜூலை 14 அன்று ''சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம்'' கூடியது,18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் பங்கேற்றனர், இந்த அமர்வில் 8 மணி நேர உழைப்பு, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உறக்கம் என்ற உன்னதமான போராட்டத்தை முன்னெடுத்து செல்வது என்றும், சிகாகோ சதியை கண்டிப்பது என்றும், 1890 மே 1 அன்று சர்வதேச அளவில் தொழிலாளர் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தது.

இதன் காரணமாகவே மே முதல் நாளை,சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக, உழைப்பாளர் தினமாக அனுஷ்டிபதற்க்கு காரணமாய் அமைந்தது.

சும்மா வரவில்லை 8 மணி நேர உழைப்பு
சும்மா வரவில்லை 8 மணி நேர ஓய்வு
சும்மா வரவில்லை. 8 மணி நேர உறக்கம்.

தொழிலாளி வர்கத்தின் தியாகத்தால் வந்தது,அதை போற்றி பாதுகாப்போம்.

சேலம் **எஸ். புகழேந்தி சித்தராஜன்**
அமைப்பு செயலாளர்/சேலம் வட்டகிளை/மாநில இணைசெயலாளர்



## பதவி உயர்வில் பணி சிறக்க வாழ்த்துகிறோம்

**திரு. D. சுதாகரன், JE 2ம் நிலை,**

காடுவெட்டிபாளையம் SS. 31.3.24 பணி ஓய்வு. வளர்ச்சி நிதி Rs.5,000/-

***- ஆசிரியர்***

# மே தினம்... சில துளிகள்

- **R. ஜெயராமன்,** மாநில செயல் தலைவர்




**ச**ர்வதேச தொழிலாளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. அமெரிக்கா மற்றும் கனடாவில் செப்டம்பர் மாத முதல் திங்கட்கிழமை தொழிலாளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

1886ல் சிக்காகோ நகரத்தில் இல்லினாய்ஸில் நடந்த ஹேமார்கட் படுகொலையை நினைவுகூறும் வகையில் 1889ல் மே 1ஆம் தேதியை தொழிலாளர்களுக்கு ஆதரவான நாளாக சர்வதேச தொழிற்சங்க கூட்டமைப்பு மற்றும் சோசலிச குழுக்களால் ஏற்கப்பட்டது.

தமிழகத்தில் அறிஞர் அண்ணா வேறெந்த மாநிலமும் அறிவிக்காத நிலையில் மேதினத்தை விடுமுறை நாளாக அறிவித்தார் எனவும், 1969ல் கலைஞர் அறிவித்தார் எனவும் கூறப்படுவதுண்டு.

1990ல் வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது மத்திய அரசு மே 1 ஐ விடுமுறையாக அறிவித்தது. 1889 ஜூலை 14ல் பரிசில் நடந்த சர்வதேச தொழிலாளர் நாடாளுமன்ற கூட்டத்தில் 8 மணி நேர போராட்டத்தை முன்னெடுப்பதெனவும், 1890 மே 1ஐ உலகளாவிய தொழிலாளர் தினமாக அறிவிக்க அறைகூவல் விடுக்கப்பட்டது.

சிங்காரவேலர் இந்தியாவில் தொழிலாளர் தினத்தை கொண்டாட வலியுறுத்தி, சென்னையில் 1923ல் மே தினம் மெரினா கடற்கரையில் கொண்டாடப்பட்டது. அதே நளில் திருவான்மியூரிலும் திரு. வேலயுதம் தலைமையில் சுப்ரமணிய சிவா உள்ளிட்டோர் உரையாற்ற கொண்டாடப்பட்டது. இதுவே செங்கொடியேற்றப்பட்ட முதல் மே தினமாகும் (செய்தி ஊடகங்களிலிருந்து தொகுக்கப்பட்டது)

# TRIPARTITE AGREEMENT
# BETWEEN
# THE GOVERNMENT OF TAMIL NADU, TNEB LIMITED, TANTRANSCO, TANGEDCO AND TRADE UNIONS AND ASSOCIATIONS REPRESENTING OFFICERS/ EMPLOYEES & PENSIONERS

This Tripartite Agreement entered into at Chennai on this 12th day of February 2024 between the Government of Tamil Nadu represented by its Principal Secretary to Government, Energy Department, (hereinafter called as the "State Government"), and the Party of the FIRST PART;

And

(1) The TNEB Limited, (2) the Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and (3) the Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) company/corporations wholly owned by the Government of Tamil Nadu and incorporated under the Companies Act, 1956 (Act 1 of 1956), (hereinafter collectively called as "Successor entities") which expression shall unless repugnant to the context or meaning thereof include its successors and assigns, represented by its Chairman and The Parties of the SECOND PART;

And

The Trade Unions and Associations representing Officers/Employees and Pensioners of TNEB (covered under (Per) B.P. (Ch) No.247 (SB) Dated 17.10.2007) (hereinafter called as "Union/Association") represented by the respective General Secretary/President or any other authorized representative, as the case may be and the Parties of the THIRD PART;

**WHEREAS**

1. The Government of Tamil Nadu, in G.O.(Ms) No.114 Energy (B2) Dept, dated 08.10.2008, have accorded in-principle approval for the re-organization of the Board by establishing a holding company, namely, TNEB Limited and two subsidiary companies namely, Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) with the stipulation that the aforementioned companies shall be wholly owned by the Government of Tamil Nadu;

2. The Officers/Employees of the Board may be apprehensive that on such reorganization of the Board they may be retrenched and / or their service conditions may be adversely affected or their services may be privatized.

3. The Government of Tamil Nadu have clearly stated that such apprehensions of Officers/ Employees are unfounded.

4. For the purpose of smooth implementation of the policy of re-organization and restructuring of the Board and consequent absorption of the Officers/ Employees in successor entities as also to dispel the apprehensions that are being raised by the Unions and Associations mentioned in Clause 2 above, the parties herein mutually agree as under and undertake to abide by the same to achieve the aforesaid objective;

5. Now, therefore, in consideration of the premises, mutual agreements, Covenants and conditions set forth herein, it is agreed by and between the parties as follows:-

(1) In so far as this Tripartite Agreement is concerned;

- (a) 'State Government' means 'Government of Tamil Nadu;
- (b) 'Board' means the Tamil Nadu Electricity Board;
- (c) 'Existing Officers/ Employees' means Officers/Employees of the Board as on the date of signing of this agreement;
- (d) 'Holding Company' means the TNEB Limited;
- (e) 'Successor entities' or 'Corporate entities' means 'TNEB Limited', TANTRANSCO and 'TANGEDCO';
- (f) 'Subsidiary Companies' means TANGEDCO and TANTRANSCO;

(2) All other words and expressions used herein and not defined shall have the meanings respectively assigned to them as stated in the G.O.(Ms) No:100, Energy department, dt: 19.10.2010.

(3) In view of re-organization of the Board into TNEB Limited (as holding company) and two or as many subsidiary companies like Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) as a separate Corporate entities, the State Government and the Successor entities hereby undertake that there shall be no retrenchment of existing Officers/Employees on account of such restructuring and their status/service conditions shall not in any way be less favourable than those which would have been applicable to them if there had been no such re&organization and the transfer scheme. Any employee rendered surplus through a mutually agreed process of appropriate rationalization shall be redeployed.

(4) The terms and conditions of service of the existing Officers/Employees of the Board upon transfer to the Successor/Corporate entities shall not be inferior to the present terms and conditions of service in the Board. The Successor entities will endeavor to rationalize the terms and conditions to provide for career growth and other welfare measures more beneficial to the Officers/ Employees recognizing that the Officers/Employees are an essential part of the growth of power sector and its operation in an economic and efficient manner.

(5) The principles and / or terms and conditions of service of the existing Officers/Employees in matters like promotions, appointments, internal selections, transfers, leave, all allowances, etc., regulated by existing regulations/ratios/service rules are guaranteed to

continue to be the same during transition and shall not be less favourable as stated upon permanent transfer to the respective successor entities of the Board.

(6) The existing wage settlement and work load settlement entered with the Unions/ Associations shall be valid with full force and effective even after re-organization until its validity period or a new settlement is arrived at, whichever is later. With regard to pay revision, the present system of bipartite negotiations shall continue by the Unions/ Associations with the respective successor entities, under the aegis of TNEB Limited. The successor entities of TNEB shall enter into all future wage settlements with the Unions/Associations.

(7) The parties of the first and second part shall guarantee the payment of Pension, Family Pension, Retirement/Death benefits such as gratuity, encashment of earned leave and the existing benefits including GPF/CPS and periodical Dearness Allowance Relief and all other terminal/applicable benefits that are in force as on the date of signing of this agreement to all existing Employees/pensioners/family pensioners/other eligible persons.

(8) In so far as all the Retirement and Terminal benefits of existing Officers/ Employees are concerned appropriate arrangements shall be made to ensure that the interests of the Officers/Employees, are protected. Till arrangements are finalized, all such payments to the existing Officers/Employees working on "as-is where&is" condition shall continue as per the present arrangements.

(9) It is agreed by the Parties of First and Second Part herein to consider creation of a separate fund to meet the Pension and other liabilities to the existing pensioners and pension and other terminal benefits of the existing Officers/Employees of the TNEB and the successor entities.

(10) All the existing welfare measures like the scheme for compassionate appointment, medical reimbursement, present medical insurance till its validity period and thereafter by any other suitable scheme/insurance, Educational Loan, Health Fund, HBA, Conveyance Advance, Marriage Advance, Festival Advance or any other existing loans and advances shall be continued. For introduction of new schemes/benefits/welfare measures, prior approval of Government have to be obtained after placing the issue before the respective Board.

(11) In respect of all the statutory and other schemes such as Provident Fund, Gratuity and other superannuation benefits of the Officers/Employees and matters related to employment, the successor entities shall stand substituted for all purposes of rights, powers, and obligations of the Board/entities.

(12) The existing welfare benefits to the pensioners, family pensioners, ex-gratia pensioners and existing Officers/Employees subject to modifications, that may be brought forth by the State Government, shall continue subject to the approval of the respective Company's Board. All obligations in respect of payment of pension, family pension and other retirement

benefits including provident fund, superannuation pension, gratuity and encashment of leave, etc., to the Officers/Employees already retired and to be retired from the services of the Board shall continue. For introduction of new schemes/ benefits/welfare measures, prior approval of Government have to be obtained after placing the issue before the respective Board.

(13) The period of service of the existing Officers/Employees under the Board and the successor entities shall be treated as continuous service for the purposes of all service benefits including promotion, internal selection, fixation, movement to selection grade, special grade, payment of pension etc., and retirement/terminal benefits.

(14) All benefits for the services rendered by the Officers/Employees in the Board as on the date of permanent transfer to successor entities, shall be protected.

(15) Even on formation of TNEB LIMITED, TANTRANSCO and TANGEDCO, until further orders, all the existing Officers/Employees of the Board will be retained in TANGEDCO for the present. The Officers/Employees shall continue to serve "as-is where-is" basis and shall be treated as Officers/ Employees of TANGEDCO and they would be treated as being on deputation to the other successor entities. The period of transition will be as approved by Government of Tamil Nadu in Transfer Scheme in the Government of Tamil Nadu gazette. During the transition period, i.e., till the period of finalization of options of the Officers/Employees and their absorption in the successor entities, the cadre management shall vest with TANGEDCO. During such transition period the existing seniority pattern for each category will be maintained by TANGEDCO. The other entities shall accept the employee posted by TANGEDCO wherever necessary in consultation with the TANTRANSCO and TNEB Ltd., based on seniority which shall be basis for absorption of Officers/Employees in the successor entities. The service conditions of the employee in the successor entities shall not be less favourable to them than that has been provided by the Board. Retirement/ Terminal benefits including GPF/CPS and pension payments to the retiring Officers/employees during the period of transition shall be dealt with by TANGEDCO and thereafter by the successor entities.

(16) The Officers/Employees so transferred to the service of the successor entities shall be deemed to have entered into an agreement/settlement with such successor entities to fulfill the obligations undertaken by them to the Board including in respect of repayment of loans, advances and other sums due which remain outstanding from the Officers/ Employees on the date of transfer to the successor entity.

(17) All disciplinary proceedings pending on the date of transfer of an employee to the successor entity shall be dealt with by the respective successor entity following the existing rules, Regulations, Certified Standing order and all other instructions/orders in force. All disciplinary cases already finalized and or punishments awarded by the Board under the existing rules/regulations/ certified standing orders etc., shall not be reopened, unless permitted by the rules/regulations.

(18) All the existing workload norms shall continue and changes from time to time. shall be finalized through mutually negotiated settlements between the Unions and the respective successor entity.

(19) The rule of reservation hitherto followed by the Board shall be continued by the successor entities and the successor entity shall follow the rule of reservation as ordered by the State Government from time to time including any changes/modifications.

(20) If the newly constituted Corporate entity/entities fail to implement this agreement in any respect, the State Government shall take full responsibility for enforcing such implementation by the entity concerned.

(21) The successor entities may introduce a new set of rules, regulations, certified standing order, etc., in consultation with the Unions and TNEB Ltd., which will be effective from the date following the date of completion of transition period which shall be within the ambit of the first proviso to section 133 (2) of the Electricity Act 2003. Till such introduction, the rules, regulations, certified standing orders, etc., in force on the date of this agreement shall continue to be in force. Even legitimate activity or functions of TNEB or successor entities in respect of existing Officers/ Employees including those contained in the settlements on work norms shall not be modified without following the procedure laid down in relevant law.

(22) In the event of any dispute(s)/difference(s) arising out of this Tripartite Agreement, effort shall be taken by the parties to resolve such dispute(s)/ difference(s) amicably in the first instance. If such dispute(s)/difference(s) could not be resolved within 60 days, the respective parties including the present and past Officers/Employees shall be free to avail the remedies available under any law of the land.

(23) This Tripartite Agreement shall be binding on the Government of Tamil Nadu, Successor entities and Unions/Associations/Pensioners of the Board all the existing and past Officers/ employees of the Board. The first party, the Government of Tamil Nadu shall have power to issue orders/instructions/ directions, if any from time to time to implement any of the provisions of this Tripartite Agreement and other related matters incidental thereto. In such case, it shall be the duty of other parties to this Tripartite Agreement to treat the same as part and parcel of this Tripartite Agreement, subject to the right under sub-clause (21) of clause 5 of this Tripartite agreement.

(24) The existing recognition of the Unions to be continued even after restructuring and binding on the successor entities.

(25) This Tripartite Agreement executed by and between the parties herein shall be duly notified in the Tamil Nadu Government Gazette.

(26) This tripartite agreement shall be deemed to have come into force with effect on and from the first day of November 2010.

IN WITNESS WHERE OF the parties hereto have signed this Tripartite Agreement on the day, month and year written here-in-above.

# நினைவிற்கு

**TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**
(ABSTRACT)

PENSION - Revision of pension and pensionary benefits - Orders issued by the Government - Adoption to the pensioners/family pensioners of Tamil Nadu Generation and Distribution Corporation Limited - Orders - Issued.

---

(Secretary At branch)
(Per) CMD TANGEDCO Proceedings No. 52, Dated : 02.03.2018

Maasi - 18
Heyvilambi Varudam
Thiruvalluvar Aandu-2049

Read:

i) (Per) B.P. (Ch) No. 235 (SB) dated : 01.12.2009
ii) (Per) FB TANGEDCO Proceedings No. 51 dated 06.09.2012
iii) G.O.Ms. No. 313 Finance (Pay Cell) Department dt. 25.10.17
iv) G.O.Ms. No. 337 Finance (Pay Cell) Department dt. 14.11.17
v) (Per) CMD TANGEDCO Proceedings No. 27, (SB) dt. 01.02.18
vi) Letter No. 27277/Pension/2018 Finance (Pension) Department, dated 12.02.2018.
vii) Settlement under Section 12(3) of the Industrial Disputes Act, 1947 dated 22.02.2018 on revision of Work Allocation/Wages.

**PROCEEDINGS:**

In the Government Order third read above, orders have been issued revising the pension and pensionary benefits to the pensioners of the Government. In the Government Order fourth read above, orders have been issued enhancing the income limit eligibility for family pension in respect of eligible sons/daughters below 25 years, Unmarried/ Widowed/Divorced daughters abvoe 25 years and eligible parents. The Tamil Nadu Generation and Distribution Corporation is following the orders of the Government in respect of pension and pensionary benefits to its pensioners/family pensioners. The Trade Unions of the employees of TANGEDCO as well as various Pensioner's Associations have represented for adoption of the orders of the Government to the pensioners of the Corporation. Considering their request, the Corporation, in the settlement dated 22.02.2018 entered into with the Trade Unions of the Corporation under Section 12(3) of the Industrial Disputes Act, 1947 before the Commissioner of Labour, Chennai has incorporated a term to the effect that the recent orders on revision of pension issued by the Government to their pensionedrs will be implemented for the pensioners of the Corporation in

toto. In pursuance of the terms of settlement referred to, to revise the pay of the employees/ officers of TANGEDCO on 01.01.2016 taking into account the pay drawn by the employees/ offices on 01.12.2015, and in deference to the request of the employee's unions and Retired Employees' Associations, the Corporation has decided to adopt the above orders of the Government to the pensioners/family pensioners of the Corporation.

## GRATUITY

Retirement / Death Gratuity :

19. (i) The rates for payment of death gratuity shall be revised with effect from 01.01.2016 as follows:-

| Sl.No. | Lengthe of Service | Rate of Gratuity |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Less than one year | Two times of monthly emoluments |
| 2. | One year or more but less than five years | Six times of monthly emoluments |
| 3. | Five years or more but less than eleven years | Twelve times of monthly emoluments |
| 4. | Eleven years or more but less than twenty years | Fifteen times of monthly emoluments |
| 5. | Twenty years of more | Half month's emoluments for every completed six monthly period of qualifying service subject to a maximum of 33 times of monthly emoluments |

(ii) The maximum limit of Retirement Gratuity and Death Gratuity shall be enhanced from the existing Rs. 10 lakh to Rs. 20 laksh with effect from 01.01.2016. The ceiling on gratuity shall increase by 25% of Rs. 20 lakh, i.e. Rs. 5 lakh each time the rate of dearness allowance crosses a multiple of 50 percentage points.

(iii) Retirement Gratuity for employees who have retired between 01.01.2016 and 30.09.2017 and Death Gratuity in respect of employees who have died between 01.01.2016 and 30.09.2017 shall also be reworked in accordance to clauses (i) and (ii) In such cases, pensioners / family pensioners shall be entitled to payment of differential amount between the gratuity thus worked out and that has been paid earlier.

# அன்பு

**- சிவநாச்சியார்**

அன்பு என்பது ஒரு உணர்வு. அன்புக்கு மொழி தேவையில்லை. அகத்தின் பண்பே அன்பு. அன்பு என்பது வேறு! காதல் என்பது வேறு. அன்பு பிறரிடம் எதையும் எதிர்பார்க்காமல் வருவது. காதல் என்பது எதிர்பார்ப்பு உடையது.

ஒரு மரக் குச்சியின் வேண்டாத அடைப்புகளே நீக்கும்போது தான் மூங்கில் புல்லாங்குழலாக மாறுகிறது. வேண்டாத பகுதிகளை சீவி அகற்றும் போது ஒரு பென்சில் எழுத ஆரம்பிக்கிறது.

அழகிய சிலை கல்லுக்குள் தானே இருக்கிறது. சிற்பி செய்வ தெல்லாம் கல்லில் வேண்டாத பகுதிகளை ஒதுக்குவது தானே. அது போல நம் மனதில் உள்ள அழுக்குகளை தேவையில்லாத எண்ணங்களை ஒதுக்கும்போது அன்பு மேலோங்குகிறது.

பூமிக்குள் தண்ணீர் எங்கு இல்லை? அடைத்திருக்கும் மண்ணை அகற்றும் போது அடைப்பட்ட தண்ணீர் அதிவேகமாக வரவில்லையா? அதுபோல யாரிடம் அன்பும் கருணையும் இல்லை? எல்லோரிடமும் உண்டு! ''அடைத்திருக்கும் தேவையில்லாத குணங்களை அகற் றினால் மனிதனும் அன்புமயமானவனே''. அடைப்புகளை அகற்றி அவனிடம் ஏற்கனவே உள்ள அன்பையும் கருணையும் வெளி கொணருவதே கல்வி. அத்தகைய கல்வி முறையை தான் சுவாமி விவேகானந்தர் அவர்கள் **''Education is the manifestation of perfection already in man''** என்று கூறுகிறார்கள்.

மிருகங்களுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் பகுத்தறிவு என்று சொல்லக்கூடிய ஆறாவது அறிவு. அத்தகைய பகுத்தறிவு மேலோங்கும் போது, மனிதன் அன்பில் தெய்வீகமாகிறான். அவ்வாறு அன்பு மேலோங்காத வரை மனிதன் பேசத் தெரிந்த மிருகமே.

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
ஆர்வலர் புண்கண்நீர் பூசல் தரும்''

என்று வள்ளுவர் அன்பினை அடைத்து வைக்க முடியாது. ஒருவர் துன்பப்படும் போது மற்றொருவரின் கண்களில் இருந்து சிந்தும் கண்ணீர் அவரின் அன்பினை வெளிப்படுத்தும் என்று கூறுகிறார். அன்பின் வழி உறவுகள் எவ்வாறு அமையும் என்றும், அன்பு இல்லாத உறவுகள் எவ்வாறு முறியும் என்று இராமாயணம், மகாபாரதம் என்ற இரு இதிகாசங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இராமபிரான் ஒரு பூரண மனிதனுக்கு உதாரணம். தசரனுக்கு நல்ல மகன், விசிஷ்டருக்கு நல்ல மாணவன், ஜானகிக்கு நல்ல கணவன், ஜடாய்க்கும் விபீடணனுக்கும் அனுமனுக்கும் நல்ல தோழன். மாறாக மகாபாரதத்தில் குந்தி, கர்ணன் - தாய், மகன் துரோணர், அர்ச்சுனர் - குரு, சிஷ்யன், பாண்டுவும் திருதராஷ்டிரன்- அண்ணன், தம்பி. ராமாயணத்தில் நாம் காணும் உறவுகளின் அடிப் படையில் அன்பு. மகாபாரதத்தில் நாம் காண்பதோ பேராசையாலும் தன் முனைப்பாலும் முறிந்த உறவுகள்.

இனிய உறவிற்கு அடிப்படை அன்பு தான்.'

அன்பு கலந்த ஆசிரியர் மிகப் பெரிய குரு ஆகிறார். அன்பு கலந்த கணவன் தெய்வமாகிறான். கணவனே கண் கண்ட தெய்வம்.

''A loving wife is 1000 times more beautiful than a beautiful wife''. அனைத்து உயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் தொண்டு யாவும் அன்பின் செயலாகும். அன்பு குறையும் போது அகந்தை மேலோங்குகிறது. அறம் வீழ்கிறது. அன்பு பெருகப் பெருக உள்ளத்தில் அகந்தை குறையும். அகந்தை குறைய குறைய மனம் தெளிவு பெறும்.

நாம் மற்றவரிடம் எதிர்பார்க்கும் அனைத்தையும் நம்மிடம் மற்றவர்கள் எதிர்பார்ப்பார்களே. நாம் மற்றவர்களை உயர்வாக அங்கீகரித்தால் அவர்களும் நம்மை உயர்வாக எண்ணுவார்கள் என்று தெளிவு பிறக்கும். அன்பை பெறுவதற்கு மட்டுமே நாம் தயாராக உள்ளோம். கொடுப்பதற்கு தயாராக இல்லை.

உண்மையான அன்பு சுயநலமற்றது. ஆற்றல் தரும். உயிரைக் கொடுக்கும். சகலத்தையும் தாங்கும். அத்தகைய அன்பு கொண்டவர் மீது நாம் சில நேரங்களில் கோபம் கொள்கிறோம். கோபம் எதனால் அன்பின் மிகுதியால் உரிமை கொள்கிறோம்.

காலை வேலை அலுவலகத்திற்கு புறப்பட தயாராக கொண் டிருக்கும் போது உங்களின் குழந்தை உங்களிடம் கொஞ்சி விளையாட கெஞ்சுகிறது. நீங்களும் அக்குழந்தையோடு கொஞ்சி விளையாட ஆரம்பிக்கிறீர்கள். அப்பொழுது குழந்தை உணவு உண்ட கையோடு உங்களோடு விளையாடும் போது உங்களது சேலையின் மீது கறைப்பட்டு அழுக்கு ஆகிவிடுகிறது. அப்பொழுது உடனே உங்களுக்கு கோபம் வந்து உங்களின் குழந்தையை அடித்து விடுகிறீர்கள். குழந்தை அழுது கொண்டே இருக்க நீங்கள் வேறு சேலையை மாற்றிக் கொண்டு அலுவலகத்திற்கு புறப்பட தயாராகி சென்று விடுகிறீர்கள்.

அலுவலகம் சென்ற பிறகு காலை நடந்த நிகழ்வு பற்றி யோசிக்க கூட நேரமில்லை. மாலை வீடு திரும்புகிறோம் அப்பொழுது நமது குழந்தை ஓடி வந்து அம்மா என்று நமது காலை கட்டி அணைத்துக் கொள்கிறது. அம்மா அடித்தாலே என்று கூட யோசிக்காமல் குழந்தை அம்மாவை கண்டதும் ஓடி வந்து கட்டி அணைத்துக் கொள்கிறது. இதுதான் உண்மையான அன்பு.

குழந்தை நிகழ்காலத்தில் வாழ்கிறது கடந்த காலத்தை நினைப் பதில்லை. அதுபோல தான் உண்மையான அன்பும் அக்கணத்தில் தோன்றுவது. அன்பு உள்ளவர்கள் கோபத்தை சுமந்து கொண்டிருக்கமாட்டார்கள். நிகழ்காலத்தில் வாழும் உயிர்களுக்கு நம்மால் முடிந்ததை செய்வதே அன்பு. துன்பம் போக்கும் தூய நெறியே அன்பாம், அறமாம், அறிவின் உயர்வாம். அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமை எல்லாம் அன்பின் செயலாகும். அன்பு பரிசுத்தமானது. நான் நேசிக்கும் மனிதரை எந்த வகையிலும் கஷ்டப்படுத்த மாட்டேன் என்று நினைப்பது தூய்மையான அன்பு.

''அறிந்தது சிவம் மலர்ந்தது அன்பு.''

**'ந**ல்லவன்' என்ற பட்டம் நம்மை சுற்றி இருப்பவர்கள் நமக்கு வழங்கிய கௌரவ கடன். அதை எப்போது வேண்டுமானாலும் அவர்கள் திரும்பி வாங்கி கொள்வார்கள். நீங்கள் யார் என்பதை யாரிடமும் நிரூபிக்க வேண்டிய அவசிய மில்லை. புத்திசாலிகள் என்று உலகத்தில் யாரும் இல்லை. அடுத்தவர்களுடைய பலவீனத்தை பயன்படுத்திக் கொள்பவர்கள் தான் பலசாலிகளாக வலம் வருகிறார்கள். யாரும் யாரையும் ஏளனம் செய்யவோ மதிப்பு குறைத்து நடத்தவோ செய்யாதீர்கள். இன்று நீங்கள் பலம் மிக்கவர்களாக இருக்கலாம். ஆனால் காலம் உங்களை விட பலம் வாய்ந்தது.

உடலில் பலமும் பாக்கெட்டில் பணமும் இருப்பதால்தான் ஆணவம் தலைவிரித்து ஆடுகிறது. இவ்வுலகில் யாரும் யாரை விடவும் உயர்ந்தவர்களும் கிடையாது. தாழ்ந்தவர்களும் கிடையாது. அனைவரும் பிறப்பால் சமமானவர்களே. கெட்டவனாக வாழ்வது சுலபம் நல்லவனாக வாழ்வதுதான் கஷ்டம் என்று பல பேர் சொல்லி கேட்டிருப்போம். நல்லவர், கெட்டவர் என்பது அவர் அவர்களின் வாழும் சூழ்நிலையை பொறுத்து மற்றவர் கண்ணோட்டத்தில் தோன்றும் எண்ணம்.

'வாக்கு, நாக்கு சரியாக இருந்தால் மனிதன் எப்பொழுதும் ஆகமாட்டான் வீக்கு (weak)'. உலகத்தில் யாரையும் மாற்ற முடியாது. மற்றவரை கைநீட்டி காட்டுவதை விட தன்னை மாற்றிக் கொள்ளலாம் ''Accept people as they are''.

## நான்மணிக்கடிகை பாடல். 23 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை!

***மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்***
***பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை - பெய்த***
***கலம் சிதைக்கும் பாலின் சுவையை; குலம்சிதைக்கும்***
***கூடார்கண் கூடி விடின்.***

**கருத்துரை**

தகுதியுள்ள மனிதர்களுடன் ஒற்றுமை பேணாமல் முரண்பட்டு வாழ்தல், ஒருவனது வலிமையைச் சிதைத்துவிடும்!

பொய்ம்மைக்கு இடம் கொடுத்துப் போற்றி ஒழுகுதல், அரசனின் ஒறுப்புக்கு (தண்டனைக்கு) ஆளாகிப் பொன் போன்ற உடலைப் புண்படச் செய்துவிடும்!

பொருந்தாத பாண்டம், தன்னில் நிரப்பி வைக்கப் பெற்ற பாலின் இனிய சுவையைச் சிதைத்துக் கெடுத்துவிடும்!

அதுபோல், சேரக் கூடாத மனிதர்களுடன் சேர்ந்து ஒழுகினால், அச்செய்கை அவர் குலத்தையே அழித்துவிடும்!

**அருஞ்சொற்பொருள்:**

ஒற்றுமை இன்மை = தக்காரோடு ஒற்றுமை இல்லாமை; ஒருவனை மொய் சிதைக்கும் = ஒருவனது வலிமையை ஒழிக்கும்; பொய் = பொய்ம்மையான ஒழுக்கம்; பொன் போலும் மேனியை = அழகிய உடம்பை; சிதைக்கும் = புண்படுத்தும்; பெய்த கலம் = நிரப்பி வைக்கப் பெற்ற பாண்டம்; பாலின் சுவையை = பாலின் இனிய சுவையை; சிதைக்கும் = கெடுக்கும்; கூடார் கண் = நட்புக் கொள்ளத் தகாதவரிடத்தில்; கூடிவிடின் = சேர்ந்து ஒழுகினால்; குலம் சிதைக்கும் = அச்செய்கை குலத்தையே அழித்துவிடும்.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 : 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

## Gratuity தொடர்பான மத்திய அரசு உத்தரவு

**Employees' Provident Fund Organisation**
**(Ministry of Labour and Employment, Govt. of India)**

---

No. HRD-1/8/2024/Misc.-Circulars-Part(1) Date : 30.04.2024

**OFFICE ORDER**

***Subject: Enhancement of gratuity on account of Dearness Allowances rising by 50% reg***

As per para 6.2 of the OM no. 38/37/2016-P&PW(A)(1) dated 04.08.2016 issued by Department of Pension and Pensioner's Welfare, Ministry of Personnel, Public Grievances and Pensions, Government of India, the maximum limit of Retirement gratuity and death gratuity shall be increased by 25% whenever the dearness allowance rises by 50% of the basic pay.

2. Accordingly, the maximum limit of Retirement gratuity and death gratuity shall be increased by 25% to Rs. 25 Lakh from existing Rs. 20 Lakh on account of revision of Dearness Allowance payable to Central Government Employees to 50% of the basic pay w.e.f. 01.01.2024, subject to other conditions mentioned in the DoP&PW OM dated 04.08.2016.

(This has the approval of ACC(HQ) HR)

(SK. Suman)
Additional Central PF Commissioner (HR)

## உள்ளத்தனைய உயர்வு

**ஆ. கண்ணாதுரை**



தமிழ்நாடு மின்சார வாரிய எம்ப்ளாயீஸ் பெடரேசன், கோவை தெற்கு வட்டம், சோமனூர் கோட்ட தலைவர் திரு. D. சுதாகர் 37 ஆண்டுகள் வாரியப் பணியை நிறைவு செய்து இளநிலை பொறியாளராக பணி ஓய்வு பெற்றதை முன்னிட்டு 01.04.2024 அன்று பாராட்டு விழா கருமத்தம்பட்டி கத்தோலிக்க தேவாங்கர் மஹாலில் நடைபெற்றது. கோட்ட செயலாளர் திரு. R. மகேஷ்குமாருக்கு துணையாக இணைந்து பணியாற்றி சோமனூர் கோட்டம் எம்ப்ளாயீஸ் பெடரேசனின் வலுவான கோட்டையாக விளங்குவதற்கு திரு. D. சுதாகரை போன்றோரின் தொழிற்சங்க பங்களிப்பு பெரும்பங்கு வகிக்கிறது. இவரின் தமிழ், ஆங்கிலம், இந்தி, மொழியறிவு மற்றும் அமைதியான அணுகுமுறை, அலுவலக, தொழிற்சங்க பணிகளில் உயர்வளித்து மதிப்புக் கூட்டியது எனலாம்.

மாநில பொருளாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கிய இவ்விழாவுக்கு மாநில துணைத் தலைவர் A. கண்ணாதுரை தலைமை தாங்கினார். கோவை தெற்கு வட்ட மேற்பார்வை பொறியாளர், சோமனூர் கோட்ட செயற்பொறியாளர் மற்றும் பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டு பாராட்டுரை நல்கினர்.

எம்ப்ளாயீஸ் பெடரேசன் சார்பில் திரு. S. பரஞ்சோதி அனைவரையும் வரவேற்றார். திருவாளர்கள் A. முருகவேல், I. லியோபால், R. மகேஷ்குமார், உதயகுமார் மற்றும் AEE சோமசுந்தரம் TNPEO, RW. மோசஸ், Rev. கிருஸ்டோபர், ஸ்டீபன், செல்வி D. பீனு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மகளிரணி சார்பில் திருமதி. M. பாரதி, திருமதி. A. ஜோசபின்ராணி மற்றும் திரளாக கலந்து கொண்டனர். திரு. இளையராஜா AE, நன்றியுரை கூறினார்.

## மருத்துவ சிகிச்சையில் MIOT மருத்துவமனை

Secretariat Branch,
144, Anna Salai,
Chennai - 600 002.

---

**Letter No. 44824/A13/A131/2024-1, dated : 23.04.2024**

From

**N. Kesavan,** B.Sc.,
Deputy Secretary/Inspection

To

**All Chief Engineers, (w.e.)**
All Chief Financial Controllers, (w.e)
TANGEDCO & TRANSCO, (w.e)
The Chief Internal Audit Officer/Audit Branch/Chennai-2 (w.e)
All Superintending Engineers (w.e.),

Sir,

***Sub:*** TANGEDCO - Secretariat Branch - Helath Fund - Additional privileges for impatient and out-patient services for the employees, pensioners and their dependers extended by MIOT International Hospitals Private Limited, Chennai - Communicated.

***Ref :*** From the Managing Director/MIOT International Hospitals Private Limited, Chennai letter dated 1411.2023.

****

I am to enclose herewith the copy of the letter cited, The said letter may be communicated to all the Officers/Employees under your control, so as to enable them to avail the additional privileges offered by MIOT International Hospitals Privte Limited, Chennai.

Yours faithfully,
**(R. Vijayalakshmi)**
Assistant Board Secretariat Officer
for Deputy Secretary/Inspection

To,

THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR
TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION
NPKRR MAALIGAI, NO. 144 ANNASALAI,
CHENNAI - 600 002

14-11-2023
MIOT/TANGEDCO/Lr.No.01

CMD / TANGEDCO & TNEB LTD. ★ TANTRANSCO ★ CHAIRMAN / TANTRANSCO
16 NOV 2023
6484

SECRETARY TANGEDCO
17 NOV 2023
CHENNAI-600 002

Respected Sir,

**GREETINGS FROM MIOT HOSPITALS !**

***Subject:Additional Privileges for In-Patient & Out Patient Services for the employees, pensioner and their dependents-Req.,***

MIOT International is a quaternary care hospital providing health care services for more than two decades. MIOT is a world renowned hospital founded by its Chief & Mentor Prof. Dr. P.V.A Mohandas in 1999 with the guiding principle of "putting the patients first". The hospital started as a 70 bed hospital and have grown into multi-specialty 1000 bedded medical Centre offering quaternary care across 64 specialtiesand *"Pioneered in Trauma Care Management"*with dedicated healthcare professionals.MIOT attracts international patients across 129 countries globally its team of experienced doctors, medical staff and healthcare professionals are ably led by our board of directors, whose unparalleled patient-centric approach has made us to deliver World Class healthcare here at Chennai.

We have been serving various State and Central Government institutions for more than two decades now. We would like to extend our gratitude towards the Tamil Nadu Generation & Distribution Corporation Limited for their extinguished service of promoting the coordinated development of Generation and Distribution of Electricity within the state. To further strengthen our relationship we would wish to **extend *Additional Privileges for In-Patient & Out Patient Services for the employees, pensioner and their dependents*** of TANGEDCO AND TANTRANSCO

.

Page **1** of **2**

**MIOT Hospitals Private Limited:** 4/112, Mount Poonamallee Road, Manapakkam, Chennai - 600 089, India. Tel: +91 44 4200 2288
Email: chief@miotinternational.com | www.miotinternational.com | GSTIN: 33AAACM2162N1ZJ | CIN No.: U85110TN1994PTC026791

MIOT International

| | | |
|---|---|---|
| ***As a special gesture, the following additional privileges are offered to your employees, pensioner and their dependants,*** | | |
| 1 | Out Patient Registration | Free of Cost |
| 2 | Out Patient Consultation<br>( Our regular Charges Rs.800/- ) | 50% off |
| 3 | Out Patient Blood Investigations | 30 % off |
| 4 | Out Patient Radiology Investigations | 30 % off |
| 5 | Master Health Check up | 30 % off on Packages |
| 6 | In Patient Bills | 30 % Discount for the services not approved / covered by insurance excluding implant and drugs under Tamil Nadu New Health Insurance Scheme |

***Note : Out Sourced Investigations will be charged as per actual.***

We would like to inform you that we have deputed nodal officers to facilitate any TANGEDCO officials / dependents / pensioner visiting our hospital and their contact details as follows.,

| Sl No | Name | Contact No |
|---|---|---|
| 1 | Mr.Suthan JR | 9841615433 |
| 2 | Mr.DavidHensonlal | 7708066321 |
| 3 | Mr.Mouli Shankar | 7299068574 |

MIOT Emergency Contact No: **10 57 10**

Our liaison team will further coordinate with your esteemed office for the circulation of these privileges and to ensure the accessibility of World Class Healthcare to all TANGEDCO AND TANTRANSCO personnel

Thank you

With Very Best Regards

Yours Sincerely

Reg No: 60449
MIOT International
Dr. Prithvi Mohandas
Managing Director

**Dr.Prithvi Mohandas**
**MANAGING DIRECTOR**



**MIOT Hospitals Private Limited:** 4/112, Mount Poonamallee Road, Manapakkam, Chennai - 600 089, India. Tel: +91 44 4200 2288
Email: chief@miotinternational.com | www.miotinternational.com | GSTIN: 33AAACM2162N1ZJ | CIN No.: U85110TN1994PTC026791

# ✉ பெடரேஷன் கடிதங்கள் ☐

நாள் : 03.05.2024

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : விருதுநகர் மின்வட்டம் - சிவகாசி - ஊரகம் - உதவி செயற்பொறியாளர் - நாகரீகமற்ற செயல்பாடுகள் - நடவடிக்கை எடுத்திட வேண்டுதல் - தொடர்பாக.**

**பார்வை : 1) விருதுநகர் மின்வட்டம் - வெம்பக்கோட்டை பிரிவு அலுவலர் - புகார் கடித நகல்.**
**2) TNEBEF விருதுநகர் கிளை செயலாளர் - செயற்பொறியாளர் சிவகாசி அவர்கட்கு முகவரியிட்ட கடித நகல்.**

விருதுநகர் மின்வட்டம், சிவகாசி கோட்டம் ஊரக உபகோட்டத்தில் வெம்பக்கோட்டை பிரிவு அலுவலராக திரு. சு. சேதுராமன் உதவி பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

தனது மேலதிகாரியான உதவி செயற்பொறியாளர் ஊரகம் / சிவகாசி அவர்கள் தன்னை தனது கீழ் பணிபுரியும் அலுவலராக மதிக்காமல் தரக் குறைவாகப் பேசுவதும், தனது அலுவலகத்திற்குட்பட்ட பணிகளை தன்னை செய்யவிடாமலும், பிரிவில் உள்ள களப்பணியாளர்களை நேரடியாக தொடர்பு கொண்டு பணி செய்ய சொல்வதுமான நடைமுறை தொடர்வதைக் கண்டு நேரில் பலமுறை பேசியும் அவமதிப்பு செய்வதாக புகார் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் களப்பணியிலிருந்து படித்து உள்முகத் தேர்வு மூலம் உதவி பொறியாளராக வந்துள்ள என்னை களப்பணிக்குதான் லாயக்கான ஆள் என்றும் பொறியாளருக்கான தகுதியில்லை என்றும் தன் கீழ் பணி செய்யும் தொழிலாளர்களிடம் தன்னை அவமரியாதையாகப் பேசி வருகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பெருத்த மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கும் உதவி பொறியாளர் / வெம்பக்கோட்டை அவர்களின் கடிதத்தின் மீதான தக்க விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொண்டிட விருதுநகர் மின்வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு தகுந்த உத்திரவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

நாள் : 03.05.2024

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : 2024 "மே" - ஓய்வூதியம் வழங்கப்படாமல் உள்ளது தொடர்பாக.**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம், ஓய்வு பெற்று இறப்பெய்தியவர்களின் குடும்பங்களுக்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருவதில் ஆண்டுக்கொருமுறை Life Certificate சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்டு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

2024 மே மாதம் 1ம் தேதி வழங்கப்பட்டிருக்க வேண்டிய ஓய்வூதியத்தில் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தில் சுமார் 10,000க்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படவில்லையென தமிழகம் முழுவதும் தெரிவிக்கிறார்கள். இதற்கு காரணமாக Life Certificate பெறப்பட்டு வங்கி மூலம் தமிழ்நாடு மின்சார வாரிய தணிக்கை பிரிவுக்கு அனுப்பப்பட்டிருந்தும் ஓய்வூதியம் வழங்கிட உத்திரவிடாததற்கு Life Certificate வந்து சேரவில்லையென காரணம் சொல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேலும் 31.03.2024ல் ஓய்வு பெற்றவர்களுக்கு இதுநாள் வரை பணப்பயன் வழங்கப்படவில்லையென பல்வேறு மின்வட்டத்தில் ஓய்வு பெற்றவர்களிடமிருந்து கோரிக்கையாக வந்த வண்ணமே உள்ளது.

தலைவர் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து ஓய்வூதியர்களுக்கும், குடும்ப ஓய்வூதியர்களுக்கும் 2024 மே மாதத்திற்குரிய ஓய்வூதியம் வழங்கிடவும், 31.03.2024ல் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வு கால பணப்பயன்களை உடனடியாக அளித்திடவும் தகுந்த நடவடிக்கை எடுத்திட உத்திரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

★★★

## TNEBREOS வாரியத்திற்கு கடிதங்கள்

நாள் : 03.05.2024

பெறுநர்:

**தலைமை உள் தணிக்கை அலுவலர்,**
வாரிய அலுவலக தணிக்கை கிளை,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : *2024ம் ஆண்டு ஏப்ரல் மாத ஓய்வூதியம் வழங்கப்படாமல் உள்ளது தொடர்பாக.***

தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வூதியர் குடும்ப ஓய்வூதியர், கருணைத்தொகை பெறுபவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தங்களது வாழ்நாள் சான்றினை சம்பந்தப்பட்ட வங்கிகளில் கொடுத்து ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். செப்டம்பர் மாத கடைசிக்குள் வாழ்நாள் சான்று கொடுக்காதவர்களுக்கு அக்டோபர் மாத ஓய்வூதியம் நிறுத்தம் செய்வது நடைமுறையில் உள்ளது.

ஆனால், தற்போது வாழ்நாள் சான்று கொடுக்கவில்லை என்று ஏப்ரல் மாத (30.04.2024ல்) ஓய்வூதியம் சுமார் 10,000க்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்படாமல் இருப்பதாக தெரியவருகிறது. தங்களது வாழ்நாள் சான்றினை வங்கிகளில் குறிப்பிட்ட காலத்தில் கொடுத்திருந்தும் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருப்பது, ஓய்வூதியர் மத்தியில் மிகுந்த அதிருப்தியினை ஏற்படுத்தியுள்ளது. கோடை வெயில் தாக்கம் அதிகம் உள்ள இந்த நேரத்தில் மூத்த குடிமக்கள் சிரமத்திற்கு உள்ளாகாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஓய்வூதியத்தினை அனைவருக்கும் உடனடியாக வழங்க வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(P. சுடலை)**
பொதுச்செயலாளர்/TNEBREOS

★★★

நாள் : 03.05.2024

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : *31.03.2024ல் பணி ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வுக்கால பணப்பயன்கள் வழங்க வேண்டுதல் தொடர்பாக.***

மின்சார வாரியத்தில் கடந்த காலங்களில் பணி ஓய்வு பெற்றவர்களுக்கு பணி ஓய்வு அன்றே ஓய்வுக்கால பணப்பயன்கள் வழங்கி வந்த நிலையில் சமீப காலங்களாக ஒரு வார காலத்திற்குள் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது 31.03.2024ல் பணி ஓய்வு பெற்றவர்களுக்கு ஒரு மாதம் கடந்த பின்னரும் உதாரணமாக திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தில் வருவாய் மேற்பார்வையாளராக பணிபுரிந்து 31.03.2024ல் பணி ஓய்வு பெற்றுள்ள திரு. M. செல்லச்சாமி, விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தில் மின்பாதை ஆய்வாளராக பணிபுரிந்து 31.03.2024ல் பணிஓய்வு பெற்றுள்ள திரு. K. கண்ணன், இது மாதிரி பலருக்கும் பணப்பயன்கள் வழங்கப்படாமல் இருப்பதாக தெரிய வருகிறது. இது பணி ஓய்வு பெற்றவர்கள் மத்தியில் மிகுந்த மனவருத்தத்தினை ஏற்படுத்தி வருகிறது.

எனவே, பணி ஓய்வு பெற்றுள்ள அனைவருக்கும் விரைந்து பணப்பயன்கள் வழங்கவும், இனிவரும் காலங்களில் பணி ஓய்வு பெறும் அன்றே ஓய்வுக்கால பணப்பயன்கள் அனைத்தும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(P. சுடலை)**
பொதுச்செயலாளர்/TNEBREOS

★★★

# 31.03.2024 திருவண்ணாமலையில் நடைபெற்ற செயற்குழு தீர்மானங்கள் வாரியத்தின் மேல் நடவடிக்கைக்காக...

நாள் : 05.04.2024

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEBEF மாநில செயற்குழு தீர்மானங்கள் - தெரிவித்தல் தொடர்பாக.**

2024 மார்ச் 31 அன்று காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை உண்ணாமலை திருமண மண்டபத்தில் மாநில செயற்குழு கூட்டம் தோழர் S. மணிகண்டன் மாநில தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றதில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தக்க மேல் நடவடிக்கைக்காக தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

**தீர்மானங்கள்**

1. **மின்சார வாரிய சீரமைப்பு ஒப்பந்தத்தை தமிழ்நாடு மின்சார வாரியமும், அரசும் மறுபரிசீலனை செய்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

2. **1.12.2019க்கான ஊதிய உயர்வு ஒப்பந்தம் 16.05.2023ல் ஏற்பட்டுள்ளதில் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு நிலுவைத்தொகை இரண்டாவது தவணையை உடனடியாக வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

3. **மூன்று மாத காலத்திற்குள் வேலைப்பளு பேசி முடிக்கப்படும் என குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்து கொண்ட வாரியம் 10 மாத காலமாகியும் பேச்சுவார்த்தை நடத்திட முன்வராமல் உள்ளதைக் கவலையோடு பரிசீலித்த செயற்குழு உடனடியாக வேலைப்பளு பேச்சுவார்த்தையை தொடங்கி நடத்திட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

4. **Allowanceக்காக அமைக்கப்பட்ட கமிட்டி அமைதியாக இல்லாமல் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக்கொள்கிறது. (CMD TANGEDCO Proceedings No. 29 Dated : 21.06.2023)**

5. **1.12.2019க்கும் 16.05.2023க்கும் இடைப்பட்ட காலத்தில் பணியில் சேர்ந்த கேங்மேன்களுக்கும், வாரிசு பணியாளர்களுக்கும் அளிக்கப்படாத 6% ஊதிய உயர்வை உடனடியாக அளித்திட வேண்டும். மேலும் 01.12.2015க்கும் 28.02.2018க்கும் இடைப்பட்ட காலத்தில் பணியேற்றவர்களுக்கு அளித்த ஊதிய உயர்வை திரும்ப பெற உத்திரவிட்டதை நிறுத்தி வைத்துள்ளதை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டும் என இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

6. 25.03.2024ல் வெளியிடப்பட்டுள்ள BP4ஐ முழுமையாக ரத்து செய்ய வேண்டும் அல்லது தொழிற்சங்கங்களுக்குடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

7. BP No. 2 Dated : 12.04.2022ஐ ரத்து செய்வதற்கான பரிந்துரை மின்சார வாரியம் தமிழ்நாடு எரிசக்தி துறைக்கு அனுப்பி ரத்து செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

8. Accounts Supervisor பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

9. Abolition மற்றும் Post discontinue என்ற பெயரில் பதவிகள் ஒழித்து உத்திரவிட்டுள்ளதை வாரியம் திரும்ப பெற்றிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

10. குடும்ப நல நிதி 3,00,000லிருந்து 5,00,000மாக அரசு உயர்த்தி வழங்கியுள்ள அரசாணையை மின்சார வாரியத்தில் அமல்படுத்தி உத்திரவிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (G.O. No. 197 Dated : 01.09.2021)

11. பயணப்படி 75%லிருந்து 100% பெறுவதற்கு அரசாணை இயற்றப்பட்டும் மின்சார வாரியத்தில் நடைமுறைபடுத்தாமல் உள்ளதை உடனடியாக அமல்படுத்தி மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கு 100% பயணப்படி வழங்கிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (G.O. No. 218 Dated : 13.07.2023)

12. வாரிசு வேலைக்கு மின்வட்டங்களிலிருந்து வந்துள்ள விண்ணப்பங்கள் மிக தாமதமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதை தவிர்த்து உடனுக்குடன் வாரிசு வேலை வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

13. Gangman பணியாளர்கள், களஉதவியாளர் பெயர் மாற்றத்தினுடனான பதவி உயர்வு, ஊர் மாறுதல்கள் யாவும் உடனடியாக அளித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்வதுடன் தேர்வு செய்து நிறுத்தி வைத்துள்ள 5000 கேங்மேன் பணியாளர்களும் மின்சார வாரியத்தில் பணி நியமனம் வழங்கிட வேண்டுமென மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

14. மின்வட்டங்களில், மின் உற்பத்தி நிலையங்களில் பணியாற்றி வரும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதற்கான பேச்சுவார்த்தையை நடத்திட வேண்டும், ரத்து செய்துள்ள BP No. 9 Date : 09.01.2008ஐ திரும்ப உத்திரவிட வேண்டும், இடைப்பட்ட காலத்தில் PWD ஊதியம் வழங்கி மின்வாரியமே நேரடியாக பணியமர்த்திக் கொள்ள வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

15. பகுதி நேரப் பணியாளர்கள் (சுகாதாரப் பணியாளர்கள்) இல்லாத 1000க்கு மேற்பட்ட அலுவலகங்களுக்கு உடனடியாக பதவிகளை நிரப்பிட வேண்டுமாய் இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது. (கடித எண். 001046/G56/G562/216 Dt: 09.06.2017)

16. 1.12.2019க்கும் 10.05.2023க்கும் இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத் தொகையும், 2022-2023ம் ஆண்டு பணியாற்றி போனஸ் பெறுவதற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு போனஸ் உடனடியாக வழங்கிடவும் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

17. 01.12.2023க்குரிய ஊதிய உயர்வு (தொழிலாளர்களும், அலுவலர்களுக்கும்) பேச்சுவார்த்தைக்கான கமிட்டியை உடனடியாக அமைத்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

18. Superindent, Section Offcer ஆகியோருக்கு வழங்கக் கூடிய ஊதியத்தை Administrative Supervisor பணியிலிருப்பவர்களுக்கு வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

19. Chief Head Draughtsmen பதவிகள் அனுமதிக்கப்படாமல் உள்ள மின்வட்டங்களுக்கு அனுமதித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

20. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கோட்ட அலுவலகங்களுக்கு உதவி நிர்வாக அலுவலர் பதவியும் தலைமை பொறியாளர் அலுவலகத்துக்கு Senior Administrative Officer பதவியும் அனுமதித்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

21. ஒப்பந்த தொழிலாளர்களும், கேங்மேன் பணியாளர்களும் பணியாற்றுகையில் விபத்து, உயிரிழப்பும் தொடர்ச்சியாக ஏற்படுவதை தவிர்த்து, விபத்தில்லா மின்சார வாரியமாக மாற்றிட உரிய நடவடிக்கைகளை பாதுகாப்பு வகுப்புகள் நடத்துதல், பாதுகாப்பு சாதனங்கள் வழங்குதல் குறிப்பிட்ட நேரத்திற்குள் வேலையை முடிக்க வற்புறுத்தாதிருத்தல் எந்த வேலையை யார் செய்ய வேண்டுமென பணித்தல் போன்ற முறைகளைக் கையாள வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

22. காலிப்பணியிடங்கள் Field Assistant, Technical Assistant, Assistant Engineer, Junior Assistant (Adm, Acc, Audit) Assessor, Typist, Assistant Draughtsmen போன்ற அடிப்படை பதவிகளை நிரப்பிட உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

23. Mobile App மூலம் மின்கணக்கீடு செய்வதற்கும், களப்பணி செய்துள்ளதை தகவல் அளிப்பதற்கும் உத்திரவிட்டுள்ளதை தகுந்த சாதனங்கள் இணைய வசதியுடன் வழங்குகின்ற வரை நிறுத்தி வைக்குமாறு மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்